முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 121/2017

இன்று 2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 07 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சண்முகசுந்தரம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சின்னச்சாமி | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 07-12-2024 | | : |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் புரோக்கர் தொழில் செய்வது தொடர்பாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. பழனிச்சாமி என்னிடம் 1938 ம் வருடத்திய பாகப்பிரிவினை பத்திரத்தை கொடுத்தார். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்து இருக்கிறேனா என்றால் இல்லை. வேறு ஆவணங்கள் எதுவும் நான் ஒப்படைத்து இருக்கிறேனா என்றால் இல்லை. பாகப்பிரிவினை ஆவணத்தின் அசலை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. என்னிடம் அசல் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை.

2) பாகப்பிரிவினை ஆவணத்தில் யார் சாட்சிகள், எத்தனை பாகங்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1938 ம் வருடத்திய ஆவணம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. 1938 ம் வருடத்திய ஆவணத்தின் மூல ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. மூல ஆவணங்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. 1938 ம் வருடத்திய ஆவணப்படி எத்தனை உட்பிரிவுகள் மேற்கொள்ளப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்த உட்பிரிவில்

தாவாச் சொத்து வருகிறது என்றால் க.ச.எண்.365ல் வருகிறது. உட்பிரிவு தெரியவில்லை. மனையிடங்களாக பிரிக்கப்பட்ட சொத்தில் ஒரு மனையிடம் தான் தாவா தொடர்பானது என்றால் சரிதான்.

3) மனையிடங்களாக பிரிப்பதற்கு அங்கீகாரம் வாங்கவேண்டும் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கு அங்கீகாரம் பெறப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவாச் சொத்து பட்டா பூமியா அல்லது நத்தம் பூமியா என்ற விவரம் எனக்கு தெரியாது. லே அவுட் பிளான் எதுவும் ஒப்படைக்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. பட்டா பூமி எப்படி நத்தம் பூமியாக மாறியது என்ற விவரம் எனக்கு தெரியாது.

4) வழக்குச் சொத்தின் சர்வே எண் எப்படி மாறியது என்றால் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் கொடுத்த விவரங்களின்படி மாறியது. கிராம நிர்வாக அலுவலர் நேரடியாக பார்த்து தான் சான்று கொடுத்தார். எப்போது வந்து பார்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆதியில் தாவாச் சொத்து நஞ்சப்ப செட்டியார் மகன் மாதன் செட்டியாருக்கு பாத்தியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு 1938ம் வருடத்திய ஆவணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விவரங்கள் தெரியாது என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்கு மூலத்தில் மாதன் செட்டியாருக்கு 16.06 ஏக்கர் சொத்து ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதன் செட்டியார், கருப்பசாமி செட்டியார் இடையேயான உறவுமுறை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்சொன்ன விவரங்கள் எனக்கு கடந்த 10 வருடங்களாக தெரியும். மாதன் செட்டியார் தத்து பிள்ளை என்பது தொடர்பாக நான் ஆவணம் எதுவும் பார்த்தேனா என்றால் இல்லை.

6) மாதன் செட்டியாருக்கு எத்தனை குழந்தைகள் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதிகள் முத்து நஞ்சப்பனின் வாரிசுகள் என்றால் சரிதான். முத்து நஞ்சப்பன் செட்டியார் மாதன் செட்டியாருக்கு என்ன உறவு என்றால் மகன் முறையாவார். தாவாச் சொத்து வாதிகளுக்கு தான் பாத்தியம் என்றாலும், பொய்யாக ஆவணம் தயார் செய்து, சொத்துக்களை விற்பனை செய்து விட்டோம் என்றால் சரியல்ல. மாதன் செட்டியாருக்கு தெற்கு பகுதியில் தான் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது.

7) தாவாச் சொத்து, எதன் தெற்கு பகுதியில் இருக்கிறது என்பது தொடர்பாக ஆவணங்களை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதற்காக பொய்யான விவரங்களுடன் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/- T.Praveenkumar
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.